# Tamil Study Centre Homebush

# SCHOOL HANDBOOK
## பாடசாலைக் கையேடு

## 2020

info@tsch.org.au http://www.tsch.org.au

# Table of Contents


| | |
|---|---|
| **Tamil Vazhthu** | **05** |
| **Australian National Anthem** | **06** |
| **Homebush Tamil School Song** | **07** |
| **History of Tamil Study Centre Homebush** | **08** |
| **The Rationale, Our Vision, Our Mission and School Aims** | **10** |
| **The Executive Committee of Tamil Study Centre Homebush** | **12** |
| **School Opening Hours** | **12** |
| **School Fees** | **14** |
| **Leaves and Absences** | **14** |
| **Awards of Tamil Study Centre Homebush** | **16** |
| **Clubs and societies** | **16** |
| **Major Cultural events of Tamil Study Centre Homebush** | **18** |
| **Parents should know** | **20** |
| **Parents' involvement** | **20** |
| **What do we offer** | **22** |
| **Vision 2020 / 2025 Initiatives** | **22** |
| **Technology in Teaching Tamil** | **24** |
| **Library Project** | **24** |
| **The Calendar events of Tamil Study Centre Homebush** | **26** |
| **The ways to communicate with us** | **28** |
| **Some facts about Tamil language** | **30** |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *தமிழ் மொழி வாழ்த்து* | *05* |
| *அவுஸ்திரேலிய தேசிய கீதம்* | *06* |
| *ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையமக் கீதம்* | *07* |
| *ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய வரலாறு* | *08* |
| *காரண விளக்கம், எங்கள் பார்வை, எங்கள் பணி* | *11* |
| *எங்கள் நோக்கங்கள்* | *11* |
| *ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலையம் நிர்வாகக் குழு -2020* | *13* |
| *பாடசாலை நேரம்* | *13* |
| *பாடசாலைக் கட்டணம்* | *15* |
| *விடுமுறை மற்றும் சமுகமளிக்காமை* | *15* |
| *ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய விருதுகள்* | *17* |
| *சங்கங்கள்* | *17* |
| *கலாசார நிகழ்வுகள்* | *19* |
| *பெற்றோர்கள் கவனத்திற்கு* | *21* |
| *பெற்றோர்களின் பங்களிப்பு* | *21* |
| *நாங்கள் அளிப்பது* | *23* |
| "*Vision 2020-25*" *முன்முயற்சிகள்* | *23* |
| *தொழில்நுட்பம் கொண்டு தமிழ் கற்றல்-கற்பித்தல்* | *25* |
| *நூலகத் திட்டம்* | *25* |
| *ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய கால அட்டவணை* | *27* |
| *எங்களைத் தொடர்புகொள்ள* | *29* |
| *தமிழ் மொழியின் சிறப்பு* | *31* |

# ***தமிழ் மொழி வாழ்த்து***

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*
*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசை கொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி*
*என்றென்றும் வாழியவே!*
*சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினை தரு தொல்லை அகன்று*
*சுடர்க தமிழ் நாடே!*
*வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி*
*வாழ்க தமிழ் மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர் மொழி வாழியவே!*

# AUSTRALIAN NATIONAL ANTHEM

**Australians all let us rejoice,**
**For we are young and free;**
**We've golden soil and wealth for toil;**
**Our home is girt by sea;**
**Our land abounds in nature's gifts**
**Of beauty rich and rare;**
**In history's page, let every stage**
**Advance Australia Fair,**
**In joyful strains then let us sing,**
**Advance Australia fair.**

**Beneath our radiant Southern Cross**
**We'll toil with hearts and hands,**
**To make this commonwealth of ours**
**Renowned of all the lands;**
**For those who've come across the seas**
**We've boundless plains to share;**
**With courage let us all combine**
**To Advance Australia fair;**
**In joyful strains then let us sing,**
**Advance Australia fair.**

## கல்லூரிக் கீதம்

*தமிழ்மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ்*
*தமிழ்க் கல்வி நிலையம் வாழ்க*
*அமிழ்தினும் இனிய அருமை மொழியை*
*அகிலத்தில் பரப்பியே வாழ்க*
*(தமிழ்மொழிக்...)*

*கண்ணாக கல்வியையும் கலையையும் கருதும்*
*கலங்கரை விளக்கமாய் வாழ்க*
*தென் துருவத் தேசமாம் அவுஸ்திரேலியாவில்*
*தேமதுரத் தமிழோசை பரப்பியே வாழ்க*
*(தமிழ்மொழிக்...)*

*அழகான சிட்னி மாநகர் உதித்தே*
*ஆல் போல் தழைத்தே வளர்க*
*அன்பான எங்கள் ஆண்டவன் அருளினால்*
*எம் கல்வி நிலையம் வாழ்க!*
*(தமிழ்மொழிக்...)*

*வாழ்க வாழ்கவே! தமிழ் வாழ்க வாழ்கவே!!*

*இயற்றியவர்: திரு.ச. தேவராசா*

# History of Tamil Study Centre Homebush

**The Tamil Study Centre Homebush (TSCH) was established in February 1987 by a group of Tamil parents who were interested in teaching Tamil to their children. They organised classes at Homebush Public School (Rochester Street, Homebush) on Saturdays from 9.00AM to 4.15PM. TSCH started with about 30 students and 4 teachers.**

**Initially, from 1987 to 1990, the Tamil Study Centre was administrated by The Saiva Manram. In 1990, a separate administration was formed for this purpose and the then NSW Ethnic Schools Board agreed to fund the school.**

**As the number of Tamils in Sydney steadily increased over the years, Tamil Study Centres were established in various places. As a result, NSW Federation of Tamil Schools was formed in 1992/93 and Tamil Study Centre Homebush was one of the main forces behind this move. In 2012, the TSCH celebrated its Silver Jubilee.**

**The Tamil Study Centre Homebush has also made major contributions towards the development of Tamil Textbooks and an approved Syllabus for teaching Tamil as a *community language*.**

**The students of Tamil Study Centre Homebush have won many awards including that of the Education Minister's award for best community language student in NSW. A Student Representative Council was established in 1997 in order to coordinate student activities and it functions very well.**

**Today there are more than 350 students learning Tamil at Tamil Study Centre Homebush and 37 teachers are involved in teaching them. The Tamil community in Homebush acknowledges and appreciates the cooperation and support from Principal, Teachers and administrative of staff Homebush Public School by providing school facilities for the use of Tamil Study Centre Homebush.**

# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் வரலாறு

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் 1987ஆம் ஆண்டு மாசி மாதம் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிக்க வேண்டும் எனும் இச்சையால் தமிழ்ப் பெற்றோர்களால் நிறுவப்பட்டது. அவர்கள் ஹோம்புஷ் இசொச்செஸ்டர் தெருவில் உள்ள ஹோம்புஷ் பொதுப் பாடசாலையில் காலை 10:00 மணி தொடங்கி மாலை 4:15 மணி வரை வகுப்புகள் நடாத்த ஏற்பாடு செய்திருந்தனர். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 30 மாணவர்களையும் மற்றும் 4 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கியது.*

*ஆரம்ப காலகட்டத்தில் 1987ஆம் ஆண்டு தொடங்கி 1990ஆம் ஆண்டு வரை இத்தமிழ்க் கல்வி நிலையம் சைவ மன்றத்தின் துணை கொண்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு 1990 ஆண்டு முதல் தனி நிர்வாகக் குழு அமைக்கப் பெற்றுப் பாடசாலை நிர்வாகம் தனித்து இயங்கியது. இப்பாடசாலை தனித்து இயங்குவதற்காக அப்போதய* **NSW Ethnic Schools Board** *நிதியளிக்க ஒப்புக்கொண்டது.*

*ஹோம்புஷ் புறநகர் பகுதியில் இத் தமிழ்க் கல்வி நிலையம் தொடங்கிய பின் வந்த ஆண்டுகளில் சிட்னிவாழ் தமிழர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்ததால், பல்வேறு இடங்களிலும் இது போன்ற தமிழ்க் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக, 1992-1993ம் ஆண்டுகளில் என்.எஸ்.டபிள்யூ தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பு (***NSW Federation of Tamil Schools***) உருவாக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பு அமைவதற்குக் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையமும் மிக முக்கிய பங்கை வகித்தது. கடந்த 2012ஆம் ஆண்டு ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் தனது வெள்ளி விழாவை கோலாகலமாகக் கொண்டாடியது.*

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் தமிழ்ப் பாடப்புத்தகங்களின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை ஆற்றியதோடு தமிழ் மொழி* (**LOTE**) *கற்பிப்பதற்கென அங்கீகரிக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டங்களையும் வழங்கியுள்ளது.*

*நியூசவுத்வேல் மாநிலத்தில் சிறந்த சமூக மொழி மாணவருக்கான கல்வி அமைச்சர் விருது உட்படப் பல விருதுகளைக் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய மாணவர்கள் பெற்றுள்ளனர். மாணவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 1997ஆம் ஆண்டில் மாணவர்கள் பிரதிநிதி சபை நிறுவப்பட்டு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுவருகின்றது.*

*இன்று ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தில் 350 மேற்பட்ட மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்கிறார்கள். இவர்களுக்கு 37 ஆசிரியர்கள் தமிழ் மொழியைச் சிறந்த முறையில் கற்பிக்கிறார்கள். ஹோம்புஷ் புறநகர் பகுதி மட்டுமல்லாது சிட்னியிலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களும் தமிழ் கற்கிறார்கள். இவ்வேளையில் ஹோம்புஷ் வாழ் தமிழ்ச் சமூகம் இக்கல்வி நிலையம் சிறப்பாக இயங்க சிறந்த பாடசாலை வசதிகளை வழங்கி உறுதுணையாக இருந்து வரும் ஹோம்புஷ் ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினர்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் பாராட்டுகின்றது.*

## Rationale

**This Handbook is written for parents and students, to provide information about the Tamil Study Centre Homebush and its teaching and learning activities. This handbook is updated every year with information renewed each year. We welcome your comments to improve the Handbook for the future years.**

## Our Vision

**Encouraging Tamil children to understand, maintain and foster their language, culture and tradition in a multi-cultural environment in Australia.**

## Our Mission

**Endeavour to provide a quality learning environment for each and every child in the Tamil Community.**

- **To learn the Tamil language**
- **To understand and appreciate the Tamil culture and**
- **To develop an understanding towards the Tamil tradition and values.**

## At Tamil Study Centre we aim:

- **To develop positive values and attitudes about the Tamil language, including appreciation of the cultural identity of speakers of Tamil.**
- **To create a co-operative and supportive atmosphere, where each child will feel happy, be able to learn the Tamil language and communicate with others in Tamil language.**
- **To develop and provide teaching / learning programmes which contain appropriate learning opportunities and experiences, that will encourage the necessary language knowledge, skills and attitudes at different developmental stages.**
- **To provide opportunities to apply the language knowledge and the cultural understanding.**
- **To provide opportunities to all children to be creative.**
- **To provide opportunities to all students to develop leadership skills.**

## இக்கையேடு உருவாவதற்கான காரணம்

*இந்தக் கையேடு பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் பற்றியும் அதன் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பற்றியும் தேவையான தகவல்களை வழங்குவதற்காக எழுதப்பட்டுள்ளது. இந்தக் கையேடு ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களுடன் மேம்படுத்தப்படும். எதிர்காலத்திலும் கையேட்டைத் தொடர்ந்து மேம்படுத்த உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்.*

## எங்கள் பார்வை

*ஆஸ்திரேலியாவில் பல் கலாசார சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தங்கள் தாய்மொழி, தமிழ்க் கலாசாரம் மற்றும் தமிழ்ப் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ளவும், பராமரிக்கவும், வளர்க்கவும் ஊக்கப்படுத்துதல் ஆகும்.*

## எங்கள் பணி

*தமிழ்ச் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான தமிழ் கற்கும் சூழலை வழங்க முயற்சிக்கிறோம்.*

- *தமிழ் மொழியைக் கற்கவும்*
- *தமிழ் கலாசாரத்தைப் புரிந்துகொள்வதற்கும் ஏற்பதற்கும் மற்றும்*
- *தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் விழுமியங்களைப் பற்றிய புரிதலை வளர்ப்பதும்.*

## பாடசாலையின் நோக்கங்கள்

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தில் நாங்கள்:*

- *தமிழ் மொழி பேசுவோரின் கலாசார அடையாளத்தைப் பேணுவது உட்பட, தமிழ் மொழி குறித்த நேர்மறையான மதிப்புகள் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்போம்.*
- *ஒரு கூட்டுறவான சூழ்நிலையை உருவாக்கி அதில் ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியாக இருக்கவும் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளவும் மற்றவர்களுடன் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளவும் முயற்சிப்போம்.*
- *பொருத்தமான கற்கும் வாய்ப்புக்களை வழங்கி அதன்மூலம் அனுபவம் பெறத்தக்க கற்றல் கற்பித்தல் திட்டங்களை உருவாக்கி வழங்குவோம். இது பல்வேறு மொழிவளர்ச்சிக் காலகட்டங்களில் தேவையான மொழி அறிவையும் திறன்களையும் மற்றும் அணுகுமுறைகளையும் ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.*
- *மொழி அறிவு மற்றும் கலாச்சாரப் புரிதலைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவோம்.*
- *அனைத்துக் குழந்தைகளும் (தமிழ் மொழி சார்ந்த படைப்புக்கள் அல்லது ஆக்கங்களை ஊக்குவிக்க) ஆக்கபூர்வமானதாய் இருக்கத்தக்க வாய்ப்புகளை வழங்குவோம்.*
- *அனைத்து மாணவர்களும் தலைமைப் பண்புகளையும் அதற்கான திறன்களையும் வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவோம்.*

# Tamil Study Centre Homebush Executive Committee

| Position | Name |
|---|---|
| President | Mr. Sivabalan Pakeerathan |
| Secretary | Mr. Krishnakumar Chandrasenan |
| Treasurer | Mr. Salai Manimudiyan |
| Vice President (Primary) | Mr. Dr Sivarathy Ketheeswaran |
| Vice President (Secondary) | Mr. Ramanan Thuraisingam |
| Assistant Secretary | Mrs. Divya Sritharan |
| Assistant Treasurer | Mrs. Shanthini Rathanthas |
| Chairperson - Education | Mr. Aravindan Mahesan |
| Deputy Chairperson - Education | Mr. Thanigaivelan Balavelan |
| Chairperson - Cultural | Mrs. Gartheega Jayaganesh |
| Chairperson - Welfare | Mrs. Kavitha Kiritharan |
| Principal | Mrs. Selvanayaky Sivasubramaniam |
| Special Project Co-ordinators | Mr. Bharathi Kangatharan<br>Mr. Sivaganasundaram Sivakumar |
| HSC Co-ordinator | Dr. Anushiya Kannan |

# School Opening Hours

| | Morning Classes | Evening Classes |
|---|---|---|
| Pre-School – Year 6 | | 1:45 PM to 4:15 PM |
| Special Class | | 1:00 PM to 2:30 PM |
| Year 7 – Year 10 | 10:30 AM to 1:00 PM | |
| Year 11 – Year 12 | 9:00 AM to 2:00 PM | |

# School Venue

**Homebush Public School,**
**Rochester Street, Homebush NSW 2140**
**(Opposite to Homebush Railway Station)**

## தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ் நிர்வாகக் குழு 2020

| பதவி | பெயர் |
|---|---|
| தலைவர் | திரு. சிவபாலன் பகீரதன் |
| செயலாளர் | திரு கிருஷ்ணகுமார் சந்திரசேனன் |
| பொருளாளர் | திரு சாலை மணிமுடியன் |
| உப தலைவர்(கீழ் வகுப்பு) | வைத்திய கலாநிதி திருமதி. சிவரதி கேதீஸ்வரன் |
| உப தலைவர்(மேல் வகுப்பு) | திரு ரமணன் துரைசிங்கம் |
| துணைச் செயலாளர் | திருமதி திவ்யா ஸ்ரீதரன் |
| துணைப் பொருளாளர் | திருமதி. சாந்தினி இரதந்தாஸ் |
| கல்விக்குழுப் பொறுப்பாளர் | திரு அரவிந்தன் மகேசன் |
| உப கல்விக்குழுப் பொறுப்பாளர் | திரு. பாலவேலன் தணிகைவேலன் |
| கலாசாரக்குழுப் பொறுப்பாளர் | திருமதி கார்த்திகா ஜெயகனேஷ் |
| பொதுநலக்குழுப் பொறுப்பாளர் | திருமதி கவிதா கிரிதரன் |
| அதிபர் | திருமதி. செல்வநாயகி சிவசுப்ரமணியம் |
| சிறப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் | திரு. பாரதி கங்காதரன்<br>திரு சிவஞானசுந்தரம் சிவகுமார் |
| HSC ஒருங்கிணைப்பாளர் | கலாநிதி அனுஷியா கண்ணன் |

## பாடசாலை இயங்கும் நேரம்

| | காலை வகுப்புகள் | மாலை வகுப்புகள் |
|---|---|---|
| முன் பள்ளி - 6 வகுப்பு | | மாலை 1:45 - மாலை 4:15 |
| விசேட வகுப்புகள் | | மாலை 1:00 - மாலை 2:30 |
| 7ம் வகுப்பு - 10ம் வகுப்பு | காலை 10:30 - மாலை 1:00 | |
| 11ம், 12ம் வகுப்புகள் | காலை 9:00 - மாலை 2:00 | |

## பாடசாலை இயங்கும் இடம்

ஹோம்புஷ் பொதுப் பாடசாலை,
(ஹோம்புஷ் இரயில் நிலையத்திற்கு எதிரில்)
இரொச்செஸ்டர் தெரு, ஹோம்புஷ் 2140
(Rochester St, Homebush)

## School Fees

**Though the NSW Government contributes a small amount of funds annually for each student, our school charges the following facilities fee to cover the cost of running the school:**

**For the 1st member of the family: $150.00 annually (preschool to Year 9) or $205 (Year 10-12). Note: This includes the Kalaivizha and Vani villa cost.**

**Thereafter, for each member of the family: $88 for 2nd child & $55 for the 3rd child annually.**

**The State Government introduced the $100 Creative Kids Voucher per child which you can use towards your child's school fees. TSCH is a creative kids provider and accepts these vouchers. You can apply for this voucher at https://www.service.nsw.gov.au/transaction/apply-creative-kids-voucher.**

## Leave and Absence

**Student attendance is marked by class teacher on Saturdays. If your son or daughter is absent for a long period or term, it is advisable for you to notify the class teacher and the principal.**

**In case of late arrival to school, parents or guardian should sign a late note (See attached).**

**In case of leaving the school early, parents or guardian should sign an early note form (See attached).**

## எமது கல்வி நிலையக் கட்டணம்

*ஒவ்வொரு மாணவருக்கும் NSW அரசு ஆண்டுதோறும் ஒரு சிறிய தொகையை வழங்கினாலும், பாடசாலையை நடாத்துவதற்கான செலவை ஈடுசெய்ய எமது பாடசாலை பின்வரும் வசதிக் கட்டணத்தை வசூலிக்கிறது:*

*குடும்பத்தின் முதல் உறுப்பினருக்கு: ஆண்டுதோறும். $150.00 (பாலர் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை) அல்லது $205.00 (10ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை). குறிப்பு: இதில் கலைவிழா மற்றும் வாணி விழாச் செலவுகளும் அடங்கும்.*

*அதன்பிறகு, குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும்: 2வது குழந்தைக்கு $88.00 மற்றும் 3வது குழந்தைக்கு ஆண்டுக்கு $55.00.*

*மேலும் ஒரு குழந்தைக்கு $100.00 "Creative Kids" எனும் மானிய உதவியை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதை உங்கள் குழந்தையின் பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கும் நீங்கள் பயன்படுத்தலாம். ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் பாடசாலைக் கட்டணமாக இந்த மானிய உதவியை சீட்டுக்களை ஏற்றுக்கொள்கிறது.*

## விடுமுறை மற்றும் சமுகமளிக்காமை

*மாணவர் வருகை சனிக்கிழமைகளில் வகுப்பு ஆசிரியரால் குறிக்கப்படுகிறது. உங்கள் பிள்ளை நீண்ட காலமாக அல்லது ஒரு தவணைக்கு மேலாக வரவில்லை என்றால் வகுப்பு ஆசிரியருக்கும் அதிபருக்கும் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

*பாடசாலைக்குத் தாமதமாக வர நேர்ந்தால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தாமதப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும் (இணைக்கப்பட்டதைக் காண்க).*

*பாடசாலையை விட்டு, குறித்த நேரம் முடியும் முன் உங்கள் பிள்ளைகளை மீட்டுச் செல்ல வேண்டும் என்றால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் நேரத்திற்கு முன் வெளியேறும் படிவத்தில் கையொப்பமிட வேண்டும் (இணைக்கப்பட்டதைக் காண்க).*

# AWARDS OF TSCH

**We present Gold, Silver and Bronze awards to recognize our students' performance and good character.**

**There are certificates and awards given to recognize our students' academic performance in class and school competitions.**

**We also recognize his/her regular attendance at school and all other major school events. We present certificates and awards also to acknowledge regular attendance (100% or 90% & above).**

**We also give out a special award for our school's best student (in both Senior and Junior categories). The students are encouraged to apply for Best Student award. The best student of each category will be able to apply for the Minister's award.**

# CLUBS & SOCIETIES

**Choir Group:**

**Students from Year 4 and above can join the School Choir Group. The choir group members sing Tamil Thai Vazhthu, School Song and National Anthem.**

**Student Representative Council:**

**Each class nominates 2 students to the Student Representative Council annually.**

# Major Events of the Tamil Study Centre Homebush

| | |
|---|---|
| **Term 1** | **Thai Pongal Vizha, Annual General Meeting and Kalai Vizha,** |
| **Term 2** | **Speech Competition** |
| **Term 3** | **Tamil Skill Competition** |
| **Term 4** | **Vaani Vizha and prize giving ceremony with Dinner** |

## எமது கல்வி நிலையம் வழங்கும்  விருதுகள்

*எமது கல்வி நிலைய மாணவர்களின் செயற்றிறனையும் நற்பண்புகளையும் அங்கீகரிக்க தங்கம், வெள்ளி, வெண்கல விருதுகளை வழங்குகிறோம்.*

*வகுப்பு மற்றும் பாடசாலை அளவிலான போட்டிகளில் எமது கல்வி நிலைய மாணவர்களின் கல்விச் செயற்றிறனை அங்கீகரிக்கச் சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கப்படுகின்றன.*

*எமது கல்வி நிலையத்திற்கும் எமது நிகழ்வுகளுக்கும் தவறாமல் வருகை தரும் மாணவர்களையும் அங்கீகரிக்கிறோம். அம்மாணவர்களின் வழக்கமான வருகையை (100% அல்லது 90% மற்றும் அதற்கு மேல்) அங்கீகரித்து சான்றிதழ்களையும் விருதுகளையும் வழங்குகிறோம்.*

*பள்ளியின் சிறந்த மாணவருக்கான சிறப்பு விருதையும் நாங்கள் வழங்குகிறோம் (மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு). சிறந்த மாணவர் விருதுக்கு விண்ணப்பிக்க மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பிரிவிலும் தேர்வு செய்யப்படும் சிறந்த மாணவர் மாநில அமைச்சருக்கான விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.*

## சங்கங்களும் கழகங்களும்

*பாடற் குழு:*

*4ஆம் ஆண்டு மற்றும் அதற்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது கல்வி நிலைய பாடல் குழுவில் சேரலாம். பாடல் குழு உறுப்பினர்கள் தமிழ்த் தாய் வாழ்த்து, பாடசாலைக் கீதம் மற்றும் தேசிய கீதம் பாடுவார்கள்.*

*மாணவர் பிரதிநிதிகள் சபை:*

*ஆண்டு 3இல் இருந்து 11ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பும் ஆண்டுதோறும் 2 மாணவர்களை மாணவர் பிரதிநிதித்துவ சபைக்குப் பரிந்துரைக்கிறது.*

?

## எமது கல்வி நிலையத்தின் முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| பருவம் 1 | தைப் பொங்கல் விழா, ஆண்டுப் பொது கூட்டம், கலை விழா |
| பருவம் 2 | பேச்சுப் போட்டி |
| பருவம் 3 | தமிழ் அறிவுப் போட்டி, |
| பருவம் 4 | வாணி விழா, பரிசளிப்பு விழா |

# Parents should know

**The Tamil Study Centre is built on voluntary co-operation, friendliness and integrity, where students, staff and parents take an active part in the school and work together to provide the best possible opportunity to learn the Tamil language and culture.**

**Tamil Study Centre, Homebush is a Community Language School partially funded by the Community Languages Program of Department of Education, NSW. Tamil language teaching has a privileged place along with the pursuit of greater understanding in Tamil culture and tradition. The Tamil Study Centre is a member of NSW Federation of Tamil schools.**

**Parents are "the first and principal educators" of their children in general and the Tamil Study Centre assists in this process of educating the children in Tamil. The Tamil Study Centre Homebush is managed by an Executive Committee elected each year at the Annual General Meeting by the parents. The Executive Committee is supported by three Subcommittees - Educational Subcommittee, Cultural Subcommittee & the Technology, Social and Welfare Subcommittee. The head of each subcommittee are members of the Executive committee while the other members in the subcommittees are nominated by the Executive Committee.**

**The Tamil Study Centre is a non-profit organization where expenses are shared by all parents and therefore, all pay fees.**

## பெற்றோர் கவனத்திற்கு

*தமிழ்க் கல்வி நிலையம் தன்னார்வத் தொண்டு ஒத்துழைப்பு, நட்பு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கு மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் பாடசாலையில் தீவிரமாகப் பங்கேற்கிறார்கள். அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதாலும் அவர்களது உழைப்பினாலும் தமிழ் மொழியையும் தமிழ்க் கலாசாரத்தையும் கற்கச் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்கள்.*

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் ஒரு சமூக மொழிப் பாடசாலையாகும். இக்கல்வி நிலையத்திற்கு நியூ சவுத் வேல்ஸ் கல்வித் துறையின் ‘‘சமூக மொழிகள் திட்டத்தால்’’ ஓரளவு நிதியளிக்கப்படுகிறது. இக்கல்வி நிலையம் நியூ சவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பில் உறுப்பினராகவும் உள்ளது. தமிழ்மொழி கற்பித்தலில் தனித்துவம் பெற்ற இடமாகித் தமிழ்க்கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தில் அதிக புரிதலைப் பின் தொடரும் இடமாகவும் விளங்குகிறது.*

*குழந்தைகளுக்கு தமிழ்க் கல்வி கற்பிக்கும் செயல்முறையில் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் உதவுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் ஹோம்பஷ் தமிழ்க் கல்வி நிலையம் நிர்வகிக்கப்படுகிறது. நிர்வாகக் குழுவை கல்வித் துணைக்குழு, கலாச்சாரத் துணைக்குழு மற்றும் தொழில்நுட்பம், சமூக மற்றும் நலன்புரித் துணைக்குழு ஆகிய மூன்று துணைக்குழுக்கள் ஆதரித்து நடக்கின்றன. ஒவ்வொரு துணைக்குழுவின் தலைவரும் செயற்குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள், துணைக்குழுக்களில் உள்ள மற்ற உறுப்பினர்கள் செயற்குழுவால் நியமிக்கப்படுவார்கள்.*

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் இலாப நோக்கற்ற அமைப்பாகும். இங்குள்ள அனைத்து நிர்வாகச் செலவுகளும் பெற்றோர்கள் அனைவராலும் பகிரப்படுவதால் அனைவரும் பாடசாலைக் கட்டணங்களைத் தவறாமல் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.*

# Parents' Involvement

**The Executive Committee and Teachers recognize and endorse the fact that the parents are the prime educators of their children. We view the process of child's Tamil language development to be a co-operative effort between school and home.**

**Parents are encouraged to become involved in the Tamil language teaching process through:**

- **talking to children in Tamil whenever possible**
- **guiding children through their homework and other school activities**
- **discussing with the teachers about the progress of children**
- **attending special functions organized by school**
- **participation in school activities**
- **taking responsibilities at executive level**

## பெற்றோர்களின் பங்களிப்பு

*நிர்வாகக் குழுவும் ஆசிரியர்களும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள் என்ற உண்மையை அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறார்கள். பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என நாங்கள் கருதுகிறோம்.*

*இதன் மூலம் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.*

*அதாவது:*

- *தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது*
- *வீட்டுப்பாடம் மற்றும் பிற பள்ளி நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுவது*
- *குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவது*
- *பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது*
- *பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது*
- *நிர்வாக மட்டத்தில் பொறுப்புகளை எடுத்துக்கொள்வது*

# What do we offer?

**We, at the Tamil Study Centre Homebush, acknowledge that the best way of maintaining our language, culture and tradition is by learning them and applying them in real life.**

**Tamil Study Centre Homebush conducts classes from Pre-School to year 12. All our teachers are suitably qualified to teach Tamil and have many years of experience in teaching. We use an approved syllabus for teaching *Tamil as a community language.* Prior to admission, children are assessed and based on this assessment, they are admitted to different classes. Apart from the continuous assessment of the four language skills, there are mid-year and end of year examinations for all children. In order to provide opportunities to apply the language knowledge and demonstrate the cultural understanding, the school organizes several cultural functions and competitions each year. The High Achievers are rewarded at the annual Prize-giving day.**

**Tamil Study Centre Homebush also encourages all children to participate in many other competitions and events that are organized by other organizations such as the Australian Society of Graduate Tamils (ASOGT), *Saiva Manram,* NSW Federation of Tamil Schools, *Durga Devi Devasthanam*, *Kampan Kalagam, Tamil Manram* etc.**

## எங்கள் சேவை

*தமிழ்க் கல்வி நிலையம் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் தமிழ் மொழி, கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றைக் கற்பிக்கும் நோக்கத்தைக் கொண்டு இயங்குகிறது.*

*பாலர் வகுப்புத் தொடக்கம் பன்னிரண்டாம் வகுப்புவரை தமிழ் வகுப்புகளை அவ்வவ் வகுப்புகளுக்கேற்பத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்* ( a community language) *பயிற்றுவிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது. மாணவர்கள் பாடசாலைக்கு அனுமதிக்கப்படும்போது, அவர்களின் கல்வித் தராதரம் மதிப்பிடப்பட்டு அவர்களின் தமிழ்க் கல்வி அறிவுக்கேற்ப அதற்குரிய வகுப்புக்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். தொடர்ச்சியான நான்கு தமிழ் மொழித் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அரையாண்டு, ஆண்டிறுதிப் பரீட்சைகள் எல்லா வகுப்புகளுக்கும் நடாத்தப்படுகின்றன. மாணவர்கள் தாங்கள் கற்ற தமிழ்மொழித்திறன், கலாசாரம் பண்பாடு, மரபுகள் என்பவற்றை இயல், இசை , நாடகம் எனபவற்றினூடாக வெளிப்படுத்த எமது கல்வி நிலையம் பேச்சுப் போட்டி, தமிழ் அறிவுத்திறன் போட்டி கலை விழா போன்ற நிகழ்வுகளை வருடந்தோறும் நடாத்தி வருகிறது. இந்த நிகழ்வுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்படுகிறார்கள்.*

*இதனைத் தவிர எல்லா மாணவர்களும் அவுஸ்திரேலிய தினத்தில் தங்கள் பங்களிப்பைச் செலுத்தவும், அவுஸ்திரேலிய தமிழ்ப் பட்டதாரிகள் சங்கம், சைவமன்றம், தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு, துர்க்காதேவி தேவஸ்தானம், கம்பன் கழகம், தமிழ் மன்றம் போன்ற அமைப்புக்கள் நடாத்தும் விழாக்களிலும் பங்குகேற்கத் தமிழ்க் கல்வி நிலையம் மாணவர்களை ஊக்குவிக்கின்றது.*

# VISION 2020 / 2025

**This was initiated early this year, in order to identify the ways to improve and develop the Tamil Study Centre for the next generations. It is important that we need to invest and lay foundation for our future young Tamils to survive and to face the challenges in learning Tamil and be Tamil.**

**The Informal committee of the Vision 2020 & 2025 includes former committee members, teachers, enthusiastic parents and current committee members. The committee identified several issues and projects to go forward.**

**Some of the projects are**

1. **Use the current technology to teach Tamil in classes and remotely. We formed a subcommittee to look after the project. Details below.**
2. **Improving the communication between parents and teachers / committee members, via Facebook, WhatsApp groups for each class, quarterly newsletter, school handbook, regular emails, and meetings and discussions.**
3. **To encourage reading Tamil Books, TSCH will initiate a library project. Please see the details below.**
4. **Archiving the documents, teaching and examination resources and Kalai Vizha Magazines.**
5. **Establishing more user friendly website with integrated database.**
6. **Reviews of constitution, policies and procedures and competitions & examinations.**

## பாடசாலையின் எதிர்காலம், தூரநோக்கு 2020, 2025

*அடுத்த தலைமுறைக்கு தமிழ்ப்பாடசாலையின் தொடர்ச்சியான பணியினை முன்னெடுத்துச் செல்ல இந்த ஆண்டு முற்பகுதியில் பெற்றோர்களினதும், தமிழ் ஆர்வலர்களினதும் ஆதரவோடு தமிழ்ப் பாடசாலை பற்றிய தூர நோக்கு வித்திடப்பட்டது. எதிர்காலத் தமிழ் மாணவர்கள் தமிழைக் கற்றுத் தமிழர்களாகத் தங்கள் அடையாளங்களைக் காப்பதற்கு நாங்கள் உறுதியான பங்களிப்புடனும் திடசங்கற்பத்துடனும் செயற்படவேண்டிய அவசியத்தை புரிந்து கொள்வது முக்கியமாகும்*

*2020 & 2025 தூரநோக்கு செயல்திட்டத்திற்காக, கல்விநிலைய முன்னாள் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், நடப்பாண்டுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இந்தத் தூர நோக்கு நிர்வாகக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிர்வாகக் குழு பல்வேறுபட்ட செயற் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு பல சவால்களை எதிர் கொண்டுள்ளது*

1. *தற்போதய தகவல் தொழில்நுட்பத்தைப்* ( Information & Communication Technology) *பயன்படுத்தி வகுப்பறைகளிலும், தொலைவிலிருந்தும் தமிழைக் கற்பித்தல், இதற்கான ஒரு உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.*
2. *வகுப்பாசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பாடலை மேம்படுத்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முகநூல் முலமாகத் தொடர்பு கொள்ளுதல்* (Facebook, email WhatsApp, ) *காலாண்டுக்கான செய்தி மடல், பாடசாலைக் கையேடு, ஒழுங்கான மின்னஞ்சல்கள், கூட்டங்கள், கலந்துரையாடல் ஆகியன கைகூடியுள்ளன.*
3. *மாணவர்களின் வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதற்காகத் தமிழ்க் கல்வி நிலையம் பாடசாலையில் நூலக வசதியினை அமைத்து வருகிறது.*
4. *கற்பித்தலுக்கான வளங்கள், பரீட்சை வினாத்தாள்கள், பரீட்சை தொடர்பான தகவல்கள், வருடாந்தக் கலை விழா மலர்கள் ஆகியவற்றை இலத்திரனியல் ஆவணங்களாக மாற்றுவதோடு அவற்றைச் சேமித்தலும்/களஞ்சியப்படுத்தலும் மேற்கொள்ளப்படுகிறது.*
5. *பாடசாலைத் தகவல்களை உள்ளடக்கியதும் இலகுவாகக் கையாளக்கூடியதுமான இணையத் தளத்தை அறிமுகம் செய்தல்.*
6. *பாடசாலைக்கான சட்டக் கோவை, கொள்கைகளும் அதனை நடைமுறைப்படுத்தலும், பாடசாலையில் நடாத்தப்படுகின்ற கல்விசார் போட்டிகளுக்கான விதி முறைகள், எனபவற்றை காலத்துக் காலம் மீளாய்வு செய்தல்*

## TECHNOLOGY DEVICES IN TEACHING TAMIL

**In order to use the advancing technology in our school, a subcommittee (TSCH TECH TEAM) was appointed to look after introduction of tech devices in teaching Tamil, creating a new website & creating a user friendly database of students. This was to form an integrated system to take our school forward technologically.**

**It is very worthy project but is costly. In order to run the project, we are looking at the following options:**

1. **Encouraging the teachers to use their own device with additional technical support provided to them by the Executive Committee.**
2. **Limiting the amount of TSCH funding and instead, looking into government funding in the future.**

**If you wish to join and help the project or offer financial support, please contact Balavelan on email: balavelan@gmail.com.**

## LIBRARY PROJECT

**We are planning to introduce library facilities to encourage reading Tamil books by students. Each class will receive books for the term and the books will rotate amongst the students. We advise the parents to help their children read those books at home. The list of books will be recorded, and the parents will need to certify their child's reading. It is a similar program to `Premier's Reading Challenge' in mainstream schools.**

**Therefore, each class will have a set of books for the students to rotate amongst themselves. The project will be run by the assistant teacher of each class. Thanks to Mr. Vijay Muhunthan for donating the books in memory of Mr. Vijeyaratnam.**

## தமிழ்மொழியைக் கற்பித்தலில் தொழில்நுட்ப சாதனங்களின் பங்கு

*புதிய தகவல் தொழில்நுட்பத்தை நமது தமிழ்ப் பாடசாலையில் ஊக்குவிப்பதற்காக நிர்வாக உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. தகவல்தொழில்நுட்பக் கருவிகளை (iPads,) உபயோகித்தல், புதிய இலகுவான இணையத்தளம் ஒன்றை அறிமுகம் செய்தல் மூலம் எல்லாத் தகவல்களையும் ஒரே இடத்தில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளல்.*

*இது ஒரு மிகவும் தரமிக்க செயல் திட்டம், புதிய தொழில்நுட்பங்களையும் அது சார்ந்த கருவிகளையும் வாங்குவதற்கு அதிக பணமும் செலவாகும். இத்திட்டத்தை குறைந்த செலவுடன் நிறைவேற்றுவதற்கு*

1. *ஆசிரியர்கள் தங்களின் தொழில்நுட்ப உபகரணங்களைப் பாவிக்க ஊக்குவித்தல், அதற்கான தொழில்நுட்பச் செயற்பாட்டு ஆற்றலை பாடசாலை நிர்வாக குழு வழங்குதல்*
2. *அரசாங்க நன்கொடைகளைப் பெறுவதன் மூலம், பாடசாலை நிதியிலிருந்து செலவு செய்வதை தவிர்த்தல்*

*இந்த திட்டத்திற்கு உதவ முன்வரும் நலன் விரும்பிகள் திரு பாலவேலனுடன் homebushtsch@gmail.com என்னும் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.*

*நூலக அறிமுகம்*

*தமிழ் வாசிப்பினை மாணவர்களிடையே ஊக்குவிப்பதற்காகத் தமிழ்க் கல்வி நிலையம் தமிழ்ப் பாடப்புத்தகங்களுக்கான நூலகவசதியை ஏற்படுத்தவுள்ளது. ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட புத்தகங்கள் வழங்கப்படும். இப் புத்தகங்கள் அவ்வகுப்பு மாணவர்களின் பயன்பாட்டிற்காகச் சுழற்சி முறையில் நிர்வகிக்கப்படும். பெற்றோர்கள் இப்புத்தகங்களைத் தங்கள் பிள்ளைகள் வாசிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகம் பதிவுசெய்யப்பட்டு, அப்புத்தகங்களால் தங்கள்பிள்ளைகளின் வாசிப்புத்திறன் ஊக்குவிக்கப்பட்டதா என்பதைப் பெற்றோர்கள் உறுதி செய்தல் வேண்டும். இது* Premier’s *என்ற திட்டத்தைப் போன்று ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தொகைப் புத்தகங்கள் வழங்கப்படும், மாணவர்கள் தங்களுக்கு வழங்கபட்ட புத்தகம் வாசித்து முடித்தபின், மற்றைய மாணவர்களிடம் கையளிக்க வேண்டும். இது அவ் வகுப்பு உதவி ஆசிரியர் மூலமாக செயற்படுத்தப்படும். இத் திட்டத்திற்கான நூல்களைத் தனது தந்தையாரின் நினைவாக நன்கொடையளித்த திரு விஜய முகுந்தன் அவர்களுக்குத் தமிழ்க் கல்வி நிலையத்தின் மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகும்*

# The ways to communicate with us

**There are several ways to contact our administrative committee: in person, by phone, email. Please see the details in the contact page.**

**Class WhatsApp Groups: For an effective communication between class teachers and the parents / students, we formed WhatsApp groups. In order to be in the WhatsApp group of you son or daughter, we request you to sign an agreement form (See attached).**

**Group Email: We regularly send emails to update you about the events and information. Please make sure that your email is up to date with us.**

**Newsletter: we publish a newsletter every term with information about the term and send it to you all by group email.**

**We are creating a new Website for our school, you may obtain information on school, past papers of various tests and competitions in our website: http://www.tsch.org.au/web/**

**Facebook: We encourage you to join our Facebook page (Tamil Study Centre, Homebush) in order to get photos and news on events. Please `like' the page to be notified.**

**To contact the school:**

**Email: info@tsch.org.au**
**Website: http://www.tsch.org.au**
**Address: P.O.Box 4019, Homebush South, NSW 2140, Australia**

**Thank You**
**Prepared by the Administrative committee 2020 of the**
**Tamil Study Centre, Homebush**

## எங்களுடன் தொடர்புகொள்ள

*எங்களுடன் நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். தொடர்புகொள்வதற்குத் தகவல் பக்கத்தைப் பார்க்கவும்.*

புலனம் தொடர்புக் குழு (WhatsApp): *மிகவும் பயனுள்ள வகையில் வகுப்பாசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தப் புலனம் தொடர்புக்குழுவை ஏற்படுத்தியுள்ளோம். பெற்றோர்களின் அனுமதியுடன் மாணவர்கள் இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.*

*மின்னஞ்சல் தொடர்பு* (email): *மிகவும் முறைப்படுத்தப்பட்ட மின்னஞ்சல் மூலமாகப் புதிய தகவல்களும், அவ்வப்போது நடபெறும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களும், நடைமுறையில் மாற்றப்பட்ட தகவல்களும் அனுப்பிவைக்கப்படும்.*

செய்தி மடல்(new letter): *தகவல்களைத் தாங்கிய செய்திமடல் ஒவ்வொரு தவணையிலும் வெளியிடப்படும். இது மின்னஞ்சல் மூலமாக உங்களை வந்தடையும்.*

இணையத்தளம்(website): *பாடசாலைக்கான இந்த இணையத்தளத்தினூடாகப் பாடசாலை பற்றிய செய்திகள், கடந்தகாலப் பரீட்சை வினாக்கள், போட்டிகளுக்கான விதிமுறைகள், மேலதிக தகவலகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*முகநூல்* (Facebook): *தமிழ்ப்பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளின் படத்தொகுப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும், செய்தித்தொகுப்புக்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கும் இந்த முகநூலில் இணையுமாறு உங்களை* வேண்டுகின்றோம்.

*ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத் தொடர்புகளுக்கு*

*இணையத்தள முகவரி*: http://www.tsch.org.au

*அஞ்சல் முகவரி:* P.O Box 4019, Homebush South, NSW 2140 Australia

*உங்கள் ஆதரவுக்கு நன்றி*

*இக் கைநூல் தமிழ்க் கல்வி நிலையத்தின் 2020ம் ஆண்டுக்கான நிர்வாகக் குழுவால் தயாரிக்கப்பட்டது.*